**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**அசல் வழக்கு எண்.101/2023**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 02 ஆம் நாள் சனிக்கிழமை
வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. பி.மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஜான்சன் பீட்டர் ராஜ் (வாதியின் அதிகார முகவர்) | த/பெ.: | பால்ராஜ் |
| கிராமம்: | திருத்துறைப்பூண்டி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | கிறிஸ்துவர் | தொழில்: | தனியார் வேலை |
| வயது: | 50 | முகவரி: | திருத்துறைப்பூண்டி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 02.08.2025.

**முதல் விசாரணை :–**

நான் அசல் வழக்கில் வாதியின் அதிகார முகவர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. 01.09.2017–ல் வாதிக்கு பிரதிவாதி தான் கைப்பட எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட் அசல் **வா.சா.ஆ.1** ஆகும். 10.08.2020–ல் வாதி, அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு கொடுத்த அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 13.08.2020–ல் வாதி அனுப்பிய அறிப்பை பிரதிவாதி பெற்று கொண்டதற்காக அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.3** ஆகும். 19.08.2020–ல் பிரதிவாதியின் வழக்கறிஞர் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.4** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.